415—

மேம்பாலம் கட்டுதல்

***19696—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி–பெருங்குடி இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, தரமணி–பெருங்குடி இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலைவேண்டும்" என்று சபதம் ஏற்று (மேசையைத் தட்டும் ஒலி) நம் மக்களை வாழ வைக்க எந்நாளும் அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கிறார் புரட்சி; ஆகையால்தான் எதிரிகளுக்கு அம்மாவைக் கண்டாலே மிரட்சி. ஏழைகளின் வாழ்வில் விளக்கேற்றிய மாண்புமிகு தங்கத் தாரகை புரட்சித் தலைவி, பாரதத்தை வழி நடத்தவிருக்கும் வருங்கால பாரதப் பிரதமர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலுள்ள பெரும்பான்மையான மக்கள் தரமணி நூறடி சாலை

2013 மே 7]

வழியாக, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரைத் தாங்கியிருக்கும் எம்.ஜி.ஆர். சாலை வழியாகத்தான் சென்று வருகின்றனர். I.T. Express way–க்கு இதுதான் வழி. இந்த நகரின் முக்கியப் பகுதிகளிலிருந்து அதிகளவில் வாகனங்கள் செல்கின்றன. இதனால், இந்த இடத்தில் காலை, மாலை மட்டுமின்றி, அனைத்து நேரங்களிலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாகவே காணப்படுகிறது. இங்கு ஏற்படும் போக்குவரத்து நெரிசலினால் வேளச்சேரி வரை போக்குவரத்து நெரிசல் காணப்படுகிறது. இதனை வேளச்சேரி, ஆதம்பாக்கம், ஆலந்தூர் மற்றும் தரமணி பகுதிகளிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலையை அடைவதற்கும் பயன்படுத்துகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, மேம்பாலம் அமைப்பது குறித்து மீண்டும் பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாலை சந்திப்புகள், இணைப்புச் சாலைகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து, தங்குதடையின்றி போக்குவரத்து செல்வதற்கு ஏதுவாக உயர்நிலை பாலங்கள், பல்லடுக்கு மேம்பாலங்கள் அமைப்பதற்கு முதற்கண் அப்பகுதியிலுள்ள போக்குவரத்துச் செறிவு கணக்கிடப்படுகின்றது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளச்சேரி தொகுதி, தரமணி–பெருங்குடி இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைப்பது குறித்து ஆய்வு செய்து, சாத்தியக் கூறு இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 416, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

416—

நியாய விலைக் கடை

****2384**—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, மடப்புரம் கீழூர், மேலூர் மற்றும் இந்திரா காலனி ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சியில், மடப்புரம் கீழூர், மேலூர் மற்றும் இந்திரா காலனி ஆகிய பகுதிகளில் நியாய விலை கிளைக் கடைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட கேட்கின்ற கோரிக்கைகளை எல்லாம், 'இல்லை' என்று சொல்லாமல், அள்ளித் தருகின்ற நாளைய பாரதம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன். எனது ராதாபுரம்*